
ரூ. 120

Volume: 2 | Issue: 9 – இதழ் 74 | ஜூலை – 2025

# மணற்கேணி

MANARKENI AYVUVELI Bi-Monthly ஆய்வுவெளி



க.நித்தியா - ம.பூபதி • கு.சிந்து - இரா. இரவிச்சந்திரன் • அ.நாகஜோதி - இரா.ஏஞ்சல் • வெ.முருகன்
கோ. பழனிராஜன் • ப.சரண்யா - சா.பெரியநாயகி • தே.சுதா - பா.மதிவாணன் • உ.அலிபாவா
கா. பிரியங்கா • செ.மார்கண்டன் • இரா. வீரமணி • க.மங்கையர்க்கரசி
இரா.இராகுலன் - வ. தனலட்சுமி • மா.பரமசிவன் • எம். ஏ. நுஃமான்

66 தமிழரின் போர் அறம்
**செ.மார்கண்டன்**

71 தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்று நூல்கள் : தேடல்களும் புரிதல்களும்
**இரா. வீரமணி**

84 சிலம்புகழி நோன்பும் தலைவியின் ஒழுக்கமும்
**க.மங்கையர்க்கரசி**

93 கணியன் பூங்குன்றனாரின் பாடலில் ஊழ், பகுத்தறிவுக்கொள்கை, நிலையாமை, பிறவிக்கோட்பாடு
**இரா.இராகுலன் - வ. தனலட்சுமி**

102 அகநானூற்று உரைவேறுபாடு: செய்தனவும் செய்ய வேண்டியனவும்
**மா.பரமசிவன்**

118 அஞ்சலி:பேராசிரியர் சி. தில்லைநாதன்
**எம். ஏ. நுஃமான்**



மணற்கேணி
ஆய்வுவெளி

**இதழ் 74**
ஜூன் - 2025 - ஜூலை - 2025

ஆசிரியர்
முனைவர் து.ரவிக்குமார்
எம்.ஏ., பி.எல்., பிஎச்.டி.,

வடிவமைப்பு: சந்தோஷ் கொளஞ்சி
மெய்ப்புத் திருத்தம்: ஏ.ஜெயச்சந்திரன்

தனி இதழ் ரூ.120
ஆண்டுச் சந்தா ரூ.720
மூன்று ஆண்டுச் சந்தா ரூ.2000

வெளிநாடுகளுக்கு
ஆண்டு சந்தா US $ 25
வங்கிக் கணக்கு எண்:

Manarkeni Publication
Current Account No: 120002954573
Canara Bank, Muthialpet Branch
Puducherry
IFSC code : CNRB 0000 927

மின்னஞ்சல்: manarkeni@gmail.com
Gpay no: 6248433434

தொடர்பு முகவரி
பிள்ளையார்ப்பட்டி சாலை, வண்ணாரப்பேட்டை அஞ்சல்
ஆலக்குடி, தஞ்சாவூர் - 613601
கைப்பேசி: 8110906001

பதிவு முகவரி
எண்:1/351, கீழ்த்தளம், எம்.ஜி.ஆர். தெரு, வி.ஏ.ஓ.நகர்,
வழுதரெட்டி, விழுப்புரம் - 605403
கைப்பேசி: 6382794478

அச்சாக்கம்: மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி

# தமிழரின் போர் அறம்

செ.மார்கண்டன்

**முன்னுரை**

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்றுஇவ் வுலகத்து இயற்கை"

என்னும் புறநானூற்றின் கூற்று போருக்கான காரணத்தை முன்வைக்கின்றன. பண்டையக்கால போர்களின் துவக்கத்திற்கு மன்னர்களின் பல்வேறு ஆசைகள் காரணமாக இருந்திருக்கின்றன. பல காரணங்களால் போர் தொடங்கி நடைபெற்றிருந்தாலும், தமிழர்களின் போர் அறம் கடைப்பிடிக்கப் பட்டுள்ளதா? அல்லது தமிழரின் போர் அறங்கள் தான் என்ன ? தமிழரின் போர் அறங்கள் கால ஓட்டத்தில் நெறிப்படுத்தப்பபட்டதா? என்ற பல வினாக்களின் தேடலுக்கான விடையங்களைத் தேட முனைகிறது இக்கட்டுரை.

**போர் அறங்கள்**

தமிழ் மரபுகள் போருக்கான அறங்கள் சிலவற்றை முன்வைக்கின்றன. அவை முறையே,

- காலையில் முரசறைந்து ஆரம்பாகும் போர் மாலையில் முரசறைந்து நிறுத்தப்படும்.
- போர்க்களம் நிறுவிப் போர்க்களத்தில் மட்டுமே போர் நிகழ வேண்டும்.
- ஆயுதம் இல்லாத நிலையில் எதிரிகளைத் தாக்குதல் கூடாது.
- கோவில்கள், துறவிகள் வாழும் பள்ளிகள், அந்தணர்களில் இல்லங்கள், போன்றவையோடு இன்னும் பல போர் அறங்களைத் தமிழ்ச் சமூகம் வரையறுத்து இருக்கின்றன. இவ்வாறு வகுத்த போர் அறங்கள் எல்லா நிலைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டதா? என்பது பெருங்கேள்வியாக நிற்கின்றன.

## போர் தோன்றுவதற்கான காரணங்கள்

- வறுமை, பசி போன்றவை போருக்கான அடிப்படைக் காரணங்களாகும்.
- பொன், மண், பெண் என்னும் பிரிவினுள் உண்டான ஆசையே போருக்கான காரணமாக இருந்திருக்கின்றன.
- வலிமை உடைய ஒருவன், வலிமை குறைந்த மற்றொருவனை அடக்கி ஆள நினைக்கும் பொழுதும் போர் தொடங்கி இருக்கலாம்.
- தனக்குரிய பொருளைப் பிறர் பறிக்க நினைக்கும் பொழுதும் போர் தொடங்கி இருக்கலாம். இவை போன்ற இன்னும் பல காரணங்களால் போர் தொடங்கி இருக்கலாம். எவ்வாறு போர் தொடங்கி இருந்தாலும், தமிழரின் போர் அறங்கள் கடைப்பிடிக்கப்பட்டதா? என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் விவாத வினாவாகும்.

## போர் மரபு

தமிழரின் போர் மரபை மூன்று நிலைகளில் பிரித்துப் பகுத்துப் பார்ப்பது பொருத்தமாகும். அதன் முறையே,

- பெருங்கற்கால இனக்குழுத் தலைமை முறையும், அதனுடன் தொடர்புடைய பாணர் வாழ்வியலோடு கலந்த ஆகோள் அல்லது ஆநிரை கவர்தல் முறையிலான போர் மரபை ஆராய்தல் முதன்மையானதாகும்.
- சங்ககால வேந்தர்– புலவர் மரபின் ஊடான, ஆநிரை கவர்தல், நில உடைமை சார்ந்தும், புகழ் நுகர்ச்சி சார்ந்தும் நிகழ்த்தப்பட்ட போர்கள் இரண்டாம் தன்மை வாய்ந்த போர்களாகும்.
- சங்க காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்த, பிற்காலப் போர்களின் அறங்களை ஆராய்வது மூன்றாம் நிலையாகக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

இவ்வகையில் போருக்கான காரணங்களை மூன்று நிலைகளில் பிரித்துப் பார்ப்பதே தமிழர் போர் மரபைப் புரிந்துகொள்ளும் சிறந்த வழியாகும். பல போர் அறங்களைத் தமிழ் மரபுகள் முன்வைக்கின்றன. போர் அறங்கள் பலவற்றை விவாதித்தால் இக்கட்டுரை நீளும். ஆதலால், போர் அறங்களில் ஒன்றான பகல் பொழுதில் போர் நிகழ்ந்தது, என்ற ஒற்றைப் பொருண்மையிலான போர் அறத்தை மட்டுமே இக்கட்டுரை கவனத்தில் கொள்கிறது.

## போருக்கான பொழுது–காலம்

தமிழரின் போர்கள் பகல் பொழுதில் நடத்தப்படுவதே தமிழரின் போர் அறமாகும். பகலில் மட்டும் போரிட்டு இரவில் போரிடாமல், இரவுப்பொழுதில் பாசறை எனப்படும் கட்டூரின் கண் வீரர்கள் ஓய்வெடுத்துள்ளனர் என்பதைப் புறநானூறு மற்றும் நெடுநெல்வாடை போன்ற நூல்களின் வழியான சான்றை முன்னிலைப்படுத்தலாம். அம்முறையே,

*“வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிர்ந்த*
*வம்ப மள்ளரோ பலரோ;*
*எஞ்சுவர் கொல்லோ, பகறவச் சிறிதே”*

*(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை; புறநானூறு; 2009;302)*

என்னும் இடைக்குன்றூர்க் கிழார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் போர் செய்த பகல் பொழுதைக் குறிக்கிறது இப்பாடல். எனவே, பகல் பொழுதில் போர் நடைபெற்றதைப் புறநானூற்று 79–ஆவது பாடல் சான்றுடன் விளக்குவதை நோக்கலாம்.

“பகலில் போர் செய்ததற்கான குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை என்றே கூறலாம். ஆனால் வெட்சிப்போர் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதும் உரையாசிரியர்கள், போரின் முதல் நிலையாகிய ஆநிரை கவர்தல் என்பது இரவில், சமயம் பார்த்துக் கவர்ந்து வருவதாகும் என்று உரை விளக்கம் தந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.” (முனைவர் வி.

அன்னபாக்கியம், மறப்போரிலும் அறம்; வல்லமை மின்னிதழ்; 2021) இக்கூற்று இரவில் போர் நடந்ததையும், தொல்காப்பியர் போர் பற்றிப் பேசவில்லை என்ற கருத்தும் ஆராய்தலுக்குரியதாகும். இரவில் நடந்த போருக்கான சான்றை முன்வைத்து ஆராயலாம்.

"ஆனிரை கோடலான இவ்வெட்சித்திணைச் செயல் பெரும்பான்மையும் இரவின் கண்ணே நிகழ்வதென்றாம். புறப்பொருள் வெண்பாமாலை, விரிச்சி கேட்டலைப் பற்றிக் கூறவந்த விடத்து,

'ஈண்டிருண் மாலை சொல்லிலார்த் தன்று'
என்னும் கொளுவினாலும்,
'எழுவணி சீறா ரிருண்மாலை முன்றில்'

என்னும் வெண்பாவினாலும் அதற்குரிய நேரம் மாலைப் பொழுதென்று கூறுதலாலும், பின்னர்ப் பகைப்புலஞ் சென்று ஆகொள்ளும் நேரத்தில் அங்கெதிர்த்துப் பொருதும் நிரை காவலரைப் பற்றிக் கூறும்பொழுது 'பகல் நேரத்தில் மட்டுந் தோல்வி யடையாது வெற்றி பெறவல்ல இந்நிரை காவலர் இவ்விரவு நேரத்திற் றோல்வி யடைந்தா' ரென்னுங் கருத்துப்பட ,

'.... .... ...... பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு"

என்று வரும் வெண்பாவினால் ஆகொள்ளும் நேரம் இரவு நேரமே யென்று தெளிய வைத்தாலும் ஈது அறியப்படும். விரிச்சி வேண்டாவென்று விலக்கியதற்குக் காட்டாக மேற்காட்டிய தகடூர் யாத்திரைப் பாட்டிலும் ஆநிரை கொள்ளும் நேரத்தை 'யாமம்' என்னுஞ் சொல்லால் நள்ளிராப் போதென்று குறித்தமை காண்க." (இளவழகனார்; பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை; 1945; 21–22)

இக்கூற்றின் வழி அறிவது, யாமத்தில் ஆநிரை கவர்தல் நடைபெற்றுள்ளதால், ஆனால், இரவில் நடக்கும் போர் மரபானது பெருங்கற்கால இனக்குழுச் சமூகமாக வாழ்ந்த பாணர் வாழ்வியலோடு, சங்க காலத்திற்கு முந்தைய தமிழரின் போர் மரபு இதுவாக இருந்திருக்கலாம். வறுமையின் காரணமாக நிகழ்ந்த ஆநிரை கவர்தலில் எந்த அறமும் கடைப்பிடிக்கப்பட வில்லை என்பதே உண்மையாகும்.

"வயிறுகாய் பெரும்பசி வந்துற்ற காலை அதை எப்படியாவது தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் ஒன்று மட்டுமே தலைதூக்கி நிற்குமே யொழிய, அந்நிலையில், இதற்கு ஊரார் ஒப்புகின்றனரா? நல்ல நிமித்தம் கிடைத்ததா? என்றெல்லாம் எண்ணிப்பார்க்க இடம் தராது ஆதலின், வெட்சியாவது, பக்கத்தில் உள்ளார் பொருளைப் பசித்தவர் பறித்து உண்பது என்ற தன் தொன்னிலை திரியாதிருந்த காலத்தில் விரிச்சி எனும் துறை, மக்கள் மனக் கருத்து அறிதல் என்ற நிலையிலாவது, நற்சொல் கேட்டல் என்ற நிலையிலாவது இடம் பெற்றிருப்பது இயலாது, அவ்வெட்சி, தன் தொன்னிலை கெட்டு, மாற்றானோடு போர் தொடுக்கும் மன்னனின் முதல் நிகழ்ச்சி என்ற நிலை அடைந்த பிற்காலத்திலேயே அது, அப்பொருளில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்." (கா.கோவிந்தன்; பண்டைத் தமிழர் போர் நெறி; 2017; 33–34)

இக்கூற்று உணர்த்த விளைவது, ஊரார் ஒப்புதலோ, நிமித்தம், விரிச்சி என்ற இலக்கண வரையறைகள் வேந்தர்–புலவர் மரபில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. ஆனால், ஒற்று பார்த்தல் நிகழ்வு இனக்குழுக் கால ஆநிரை கவர்தலின் நடைபெற்றிருக்க வேண்டும். ஆநிரையின் அளவு, அதைக் காத்து நிற்கும் வீரனின் பலம், ஆநிரையை ஓட்டிவர எத்தனைப் பேர் தேவை, போன்றவைகளை அறிந்து கொள்ள ஒற்று/ வேய் பார்த்தல் என்பது ஆநிரை கவர்தலில் அவசியமாக இருந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

"ஆநிரை கவர்தல், காத்தல், பதுக்கை, நடுகல் ஆகியவற்றை இணைத்துப் பார்க்கையில் ஆநிரை கவர்தலால் எழுந்த இரு கால்நடை இனக்குழுச் சமூகங்களுக்கு இடைப்பட்ட பூசல்–போர் (Inter–tribal war–cattle raiding) என்பது பெருங்கற்கால நாகரிகத்தின் பிற்பட்ட அம்சம் போலத் தெரிகிறது. இது பாணர் மரபில்

பயின்று வந்த அடிக்கருத்துகளில் (theme–motif) ஒன்றாகலாம்". (ராஜ் கௌதமன்; ஆகோள் பூசலும் பெருங்கற் கால நாகரிகமும்; 2009; 13) இக்கூற்று, ஆநிரை கவர்தல் என்பது இனக்குழு வாழ்வின் அடிப்படைகள் என்பதைப் புலப்படுத்துகிறது.

இத்தகைய ஆநிரை கவர்தலில் எவ்வகை நெறிமுறையும் பின்பற்றப்படவில்லை என்பது உறுதியாகிறது. பசி, வறுமை, தனிமனிதனின் தேவை மட்டுமே மையமாக இருந்துள்ளதை இனக்குழுக் கால பாணர் போர் மரபு தெளிவுபடுத்துப்படுகிறது. இத்தகைய புரிதலுடன் இனக்குழு ஆநிரை கவதல் வேறு, வேந்தர் கால ஆநிரை கவர்தல் வேறு என்ற புரிதல் அவசியமாகும். இத்தகைய புரிதலுடன் இரவு, பகல் என்ற இருநிலைகளில் போர் நடைபெற்ற சூழலைப் புரிந்துகொள்வது வரலாற்றுப் பார்வை கூர்மையுடனான தெளிவை எட்டலாம்.

காரணிகளாகவும் இருந்திருப்பதை மறுப்பதற்கில்லை. மேலும், சேர, சோழ, பாண்டியர்களும் இனக்குழு வாழ்க்கையிலிருந்து தோன்றியவர்களே என்னும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களின் கருத்தும் பெருங்கற்கால இனக்குழு வாழ்வை உறுதி செய்கிறது.

"பசித்த பாலை நிலத்து மறவர் ஆநிரைகளைக் கவர்ந்து செல்ல, பேணி வளர்த்த முல்லை நிலத்து ஆயர் மீட்டுவர, ஆனிரை காரணமாக இடம் பெற்ற இப்போர் முறைகாலம் செல்லச் செல்ல வேறு உருவம் கொண்டு விட்டது. தம் ஆனிரைச் செல்வத்திற்கு அவ்வப்போது ஊறு நேரக் கண்ட ஆயர் அவ்வானிரைகளைக் காப்பதற்கு என்றே ஒரு தலைவனைத் தேர்ந்து கொண்டனர்; அவ்வகையால் உருப்பெற்றதே அரசுநிலை. அவ்வாறு தலைவனுக்குப் பெற்ற அரசன், ஆனிரை காப்பதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டு காத்து வந்தான்;

தம் ஆனிரைச் செல்வத்திற்கு அவ்வப்போது ஊறு நேரக் கண்ட ஆயர் அவ்வானிரைகளைக் காப்பதற்கு என்றே ஒரு தலைவனைத் தேர்ந்து கொண்டனர்; அவ்வகையால் உருப்பெற்றதே அரசுநிலை. அவ்வாறு தலைவனுக்குப் பெற்ற அரசன், ஆனிரை காப்பதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டு காத்து வந்தான்;

"குடிகள் ஆங்காங்கே தங்கி நிலைத்து வாழத்தலைப்பட்ட சங்ககாலத்தில் அந்தந்தக் குழுக்கள் அந்தந்த நிலப்பகுதியை அடிப்படையாய்க் கொண்ட பொருளாதாரத்தை மையப்படுத்தி வாழ்ந்தன. இந்த நால்வகைத் திணைக்குடிகளில் எது பொருளாதார வளம் மிக்கதாய் இருந்ததோ அது போருக்குக் காரணமாய் அமைந்தது. ஒவ்வொரு குழுவும் தமக்குள் மட்டுமல்ல பிற குழுக்களுடனும் போரிட்டுக் கொண்டன." (பெமாதையன்;சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்; 2010;86)

இக்கூற்று, நில அடிப்படையிலான திணைப் பகுப்பும் போர்களுக்கான அடிப்படைக்

முல்லை நிலத்தில் இடம் பெற்ற இப்புது நிலையைக் கண்ட பாலை நிலத்து மறவரும், தமக்கு வேண்டும் அவ்வானிரைகளைக் கொண்டு தருவதற்கென்றே ஒரு தலைவனைத் தேர்ந்து, தமக்கு அரசனாக்கிக் கொண்டனர்; இவ்வகையால், பாலை நிலத்து மறவர்க்கும் முல்லை நிலத்து ஆயர்க்கும் இடையே தோன்றிய போர் பாலை நிலத்து அரசனுக்கும் முல்லை நிலத்து அரசனுக்குமிடையே நடைபெறுவதாக மாறி, மேலும் சில காலம் கழிந்தவிடத்து அடுத்து அடுத்து அரசோச்சும் இரு நாட்டு அரசர்களுக்கு இடையே நடைபெறும் தொடக்கப் போராக மாறிவிட்டது". (கா. கோவிந்தன்; பண்டைத் தமிழர் போர் நெறி; 2017; 6–7)

இக்கூற்றின் வழி அறிவது, வெட்சி மலர், குறிஞ்சித் திணைக்கோ, முல்லைத் திணைக்கோ முழுவதும் உரிமையுடையதாகாது, பாலைத் திணைக்கே உரியதாம். பாலையாவது, முழுவதும் குறிஞ்சி என்றோ, முழுவதும் முல்லை என்றோ பகுக்க முடியாது. இரண்டும் கலக்குமிடம் என்பதே உண்மையாகும்.

எனவே, பாலை(வெட்சி) நில இனக்குழுவிற்கும் முல்லை(கரந்தை) நில இனக்குழுவிற்கும் இடையே நடந்த, இரவு நேர ஆநிரை கவர்தல் போர் என்பது பெருங்கற்கால போர்களேயாகும். இவை சங்ககாலப் போர்களாகாது. சங்க இல்க்கியப் பாடல்கள் முழுவதும் வேந்தர் புலவர் மரபுக்கானது மட்டுமல்ல. அங்கே, இனக்குழு பாணர் மரபுப் பாடல்களும் கலந்துள்ளது. இதை இரண்டையும் ஒன்றுசேர்த்துப் பார்ப்பதால் இத்தகைய குழப்பங்கள் வர நேர்கிறது. எனவே சங்க இலக்கியப் பாடல்களை இனக்குழுப் பாடல்களாகவும் வேந்தர் பாடல்களையும் பிரித்து ஆராய்ந்து தொகுக்க வேண்டியது அவசியமானது. எனவே சங்க இலக்கியத்தை மீள்பகுப்பாய்வு செய்து தமிழர் வரலாற்றை கட்டமைக்க வேண்டியது நமது கடமையாகும். வேந்தர் புலவர் மரபின் தொடர்ச்சியே பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் ஆநிரை கவர்தல் போராகும்.

**முடிவுரை**

பசித்தவர், பக்கத்தில் உள்ளார் பொருளைக் கொள்ளையடித்து உண்ணும் கொடுமையை அடிப்படையாகக் கொண்டதே, நிரைகவரும் வெட்சியார் ஒழுக்கம் ஆகும். வெட்சி வீரர் பாலை நிலத்திற்கு உரிய வறுமையின் பிடியில், பசியைப் போக்க ஆநிரை கவர்தல் போரை நிகழ்த்தி உள்ளனர். எனவே, இனக்குழுக்காலத்தில் இரவில் தமிழர்கள் போரைத் தொடங்கக் காரணமாக இருந்திருக்கின்றனர் என்ற முடிவை இக்கட்டுரை முன்வைக்கிறது.

**பார்வை நூல்கள்**


1. ஔவைசுதுரைசாமிப் பிள்ளை – புறநானூறு தொகுதி– 1, மூலமும் – உரையும் 1–200 பாட்டுக்கள், பூம்புகார் பதிப்பகம், பதிப்பு– 2009.
2. இளவழகனார் – பண்டைத்தமிழர் பொருளியல் வாழ்க்கை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடேட், பதிப்பு–1945
3. பெ.மாதையன் – சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை– 600 098. பதிப்பு–2010.
4. புலவர் கா.கோவிந்தன் – பண்டைத் தமிழர் போர் நெறி, ராமையா பதிப்பகம்,சென்னை–53, பதிப்பு–2017.
5. ராஜ் கௌதமன் – ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், தமிழினி பதிப்பகம், சென்னை –14, முதல்பதிப்பு : டிசம்பர் 2009
6. முனைவர் வி. அன்னபாக்கியம் – மறப் போரிலும் அறம், வல்லமை மின்னிதழ்; 2021



**கட்டுரையாளர்:**
**முனைவர் செ.மார்கண்டன்**
**இணைப்பேராசிரியர்**
**வேல்ஸ் பல்கலைக்கழகம்**
**பல்லாவரம், சென்னை**
**செல் : 9842324206**
Email : cmarkandanphd@gmail.com